வலயக்கல்விஅலுவலகம் - திருக்கோணமலை

நான்கு வருட நடுத்தரக்கால அபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம் - தரம் 2345(4Y-MTDP-G2345)
இன் கீழ் முன்னெடுக்கப்படும்
கொவிட்-19 காலமாற்று உபாயக்கல்விச் செயற்றிட்டம் - III (COVID- PASEP-III)

மாதிரிப் பரீட்சை 36 – 2022

வினாத்தாள் - I

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் முன்னோடி வினாத்தாள்

சுட்டெண் : .....

நேரம்: 1மணித்தியாலம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- ✱ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✱ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ✱ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- ✱ ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
- ✱ செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவதுபரீட்சகர் முதலாவது பரீட்கரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் வழங்கிய மதிப்பிட்டு புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியாகும்.	

www.ikeau.lk

[பக் 2ஐப் பார்க்க]


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

1ம், 2ம் வினாக்களில் தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

1) தொலைதூரம் பறக்கக்கூடியது,கூரிய பார்வையுடையது,ஊன் உண்ணி

(1) 

(2) 

(3) 

2) இரையை மீட்கக்கூடியது,இறைச்சிக்காக வளர்க்கக் கூடியது,தாவர உண்ணி

(1) 

(2) 

(3) 

3) பையொன்றில் 12 சிவப்புநிற மாபில்களும் 9 பச்சைநிற மாபில்களும் உள்ளன அவ்வாறான 8 பைகளிலுள்ள மாபில்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 168 (2)167 (3)166

4) மண்ணும் விண்ணும் எதற்கு? வாழ்வின் மறுமை, இம்மை உணர: இப்பாடலில் மண்ணும் விண்ணும் என்பது

(1)**எதிர்க்கருத்துச் சொல்**

(2)**ஒத்தகருத்துச் சொல்**

(3)**இணைமொழி**

5) இறந்தகாலச் சொல்லாக அமையும் ஒரு சொல்

(1) **வருகிறான்**

(2) **வந்தான்**


(3) **வருவான்**

6) 40 மாம்பழங்களில் 3/8 பங்கை விற்றதன் பின்னர் மிகுதிப் பழங்கள் எத்தனை?

(1) 16 (2) 34 (3) 25

www.ikeqa.lk

7) இந்த உரு ஒரேயனவான சிறிய சதுரங்கனால் ஆனது அதன்படி இவ்வுருவில் காணக்கூடிய செவ்வக வடிவங்கள் எத்தனை?



(1)8 (2) 9 (3)10

8) 10,000 ஐப் பத்தால் வகுத்தால் வரும் விடை

(1)100 (2)1000 (3)10000

9) இப்படத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க



(1) **பூச்சியம் தசம் மூன்று**

(2) **பூச்சியம் தசம் நான்கு**

(3) **பூச்சியம் தசம் ஏழு**

10) 50kg அரிசி இடக்கூடிய ஒரு சாக்குப்பையில் 30kg 500g அரிசி உள்ளது. அச்சாக்குப்பையை நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு அரிசியை அதில் இடவேண்டும்

(1) 18 kg 500g (2) 17kg 500g (3) 19 kg 500g

11) **இடைவெளியில் வரவேண்டிய எண்களின் கூட்டுத்தொகை யாது?**

9x6=54 1x6=6
10x6=60 2x6= 12
11x6=66 3x6=18
12x6=____ 4x6=____

(1) 105 (2) 138 (3) 96

12) 9+1=10, 99+1=100, 999+1=1000, 9999+1=____

(1) 10,000 (2) 11,000 (3) 1000

13) 8613 என்னும் எண்ணை ரித்தெழுதினால் கிடைக்கும் விடை
(1) 8163=8000+600+10+3
(2) 8163=8000+60+10+3
(3) 8163=8000+600+1+3


14) ஒரு வாரத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கையையும், ஒரு வருடத்தில் உள்ள மாதங்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் வருவது
(1) 20 (2)19 (3)21

www.ikedu.lk

15) தெற்கு நோக்குச் செல்லும் ஒருவர் அவரது வலதுகைப் பக்கம் திரும்பி எத்திசை நோக்கிப் பயணம் செய்வார்


(1) **வடக்கு** (2) மேற்கு (3) தெற்கு

16) பின்வரும் வரைபடத்தை அவதானித்து எண்கோலத்தை அமைத்து காட்டுக



(1) 40, 48, 56 ,64 (2) 40, 48, 54 ,64 (3) 40, 48, 56 ,60

17) எண்கோலத்தில் Aயிற்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க




(1)250 (2)270 (3)280

18) ஒரு பெட்டியில் 10 மஞ்சள்நிற மாபிள்களும் , 20 சிவப்பு நிற மாபிள்களும் இவ்விரு நிறங்களினதும் தொகையின் அரைவாசி பச்சைநிற மாபிள்களும்,15 நீல நிற மாபிள்களும் உள்ளன. இங்குள்ள பச்சை நிற மாபிள்கள் மொத்த மாபிள்களின்

(1) 1/2 **பங்காகும்** (2) 1/4 **பங்காகும்** (3) 3/4 **பங்காகும்**

19) அருகில் காட்டப்பட்டுள்ள உருவில் சிறிய சதுரம் ஒன்றின் நிளம் 1cm எனின் A இருந்து புறப்பட்ட பூச்சி ஒன்று B,D வழியாக மீண்டும் Aஐ வந்தடைய எவ்வளவு தூரம் செல்லும்



(1) 13cm (2) 15cm (3) 16cm

www.ikeda.lk

20) மூன்று நண்பர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 30 வருடங்களாகும் இவர்களின் இருவரது வயதுகளின் கூட்டுதொகை 20 வருடங்களாவதுடன் சம வயதுடையவர்களாகவும் உள்ளனர் எனின்

(1) மூவரும் வேறுபட்ட வயதை உடையவர்கள்
(2) இருவர் ஒரே வயதையும் ஒருவர் வேறுபட்ட வயதையும் கொண்டவர்
(3) மூவரும் ஒரே வயதைக் கொண்டவர்களாவர்

21) ஒருவர் தன்னிடமுள்ள பணத்தில் அரைப்பகுதியைதனது தம்பிக்கும் எஞ்சியதை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியைத் தங்கைக்கும் மிகுதியைத் தானும் எடுத்துக் கொண்டார். அவரிடம் தற்போது உள்ள பணம் ரூபாய் 50.00 எனின் அவரிடம் தொடக்கத்தில் இருந்து பணத்தொகை யாது?

(1) ரூபாய் 150.00 (2) ரூபாய் 100.00 (3) ரூபாய் 200.00

22) "கடகம்" என்பதைக்"K L K M" எனும் குறியீட்டால் காட்ட முடியும் எனின் "வடகம்" என்பதை எவ்வாறு காட்டலாம்

(1) N L K M (2) V K L M (3) V L V M




23) றம்புட்டான் தோட்டமொன்றிலிருத்து 3526 றம்புட்டான் பழங்கள் பறிக்கப்பட்டன. அவற்றுள் 154 பழங்கள் பழுதடைந்திருந்தன அவை நீக்கப்பட்டபின் மீதியாக இருந்த பழங்களில் அரைவாசி விற்கப்பட்டன. எஞ்சிய பழங்கள் எத்தனை?

(1) 1600 (2) 1686 (3) 1890

24) பத்தாயிரத்துநாற்பத்தை என்னும் எண்பெயருக்குப் பொருத்தமான எண்குறியை தெரிவு செய்க

(1) 10643 (2) 10645 (3) 10685

25) குமார் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு தெற்கு நோக்கி 10km சென்று அங்கிருந்து கிழக்கு நோக்கி 10km சென்று வடக்கு நோக்கி 2km சென்றான். எனின் அவன் சென்ற பாதையைக் காட்டும் சரியான விடை யாது?

(1) 
(2) 
(3) 

26) கீழ்வரும் சம்பங்களைச் சரியான ஒழுங்கில் எழுதினால் அமைவது

A- ஓடிச்சென்று வெளியே பார்த்தேன்.
B-டிங்,டிங் மணி ஒலிக்கும் சத்தம் கேட்டது.
C-கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படித்தேன்.
D-அப்பாவிடம் வாசித்த விடயங்களைக் கூறினேன்.
E-தபாற்காரன் கடிதத்துடன் நின்றான்.

(1) A B C E D (2) B A E C D (3) D E C B A

www.ikeou.lk

27) இப்போது நவீன செல்லிடப்பேசி அவசியமெனக்கருதப்படுவதற்கான காரணம்
(1) நவீன செல்லிடப்பேசிகள் விலை குறைவு என்பதால்
(2) மிக விரைவாகத் தகவல்களைப் பரிமாறலாம் என்பதால்
(3) அதனைத் தொழிற்படுத்துவது மிகவும் கடினம் என்பதால்

28) காலை 6.30க்கு கொழும்பு கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இருந்து இந்தியாவிற்குப் புறப்பட வேண்டிய விமானம் தாமதமாகிப் புறப்பட்டமைக்கான காரணமாக


(1) விமானி அதிக நேரம் நித்திரை செய்தமை
(2) விமானத்தில் அதிகளவில் பொருட்கள் ஏற்றப்பட்மை
(3) விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டமை

29) கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும், எழுத்துக்களினதும் நிரையைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக
A 1 C B A A 2 B C 3 B A 1 D 1 C D 4 A B C D E D E4 2
இதிலுள்ள எழுத்து A எழுதப்பட்டுள்ள எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 6 (3) 4

30) இங்கு அதிகமாக்க காணப்படுவது எழுத்துக்களா, இலக்கங்களா?
(1) எழுத்துக்கள் (2) இலக்கங்கள் (3) கூறமுடியாது

31) உருவில் காட்டப்பட்டுள்ள நிழற்றிய பகுதி முழுஉருவின் எத்தனை பங்காகும்



(1) 1/2 பங்கைவிடக் கூடியது
(2) 1/2 பங்கைவிடக் குறைந்தது
(3) 1/2 பங்காகும்

32) சரியான கோவையைத் தெரிவு செய்க
(1) 600+50+50=665
(2) 600+50+55=705
(3) 700+70+7=707

33) 9m நீளமான கம்பி ஒன்றினை 140cm நீளமுள்ள 6 துண்டுகளாக வெட்டிய பின் எஞ்சிய துண்டின் நீளம் யாது?

(1) 30cm (2) 40cm (3) 60cm

www.ikedu.lk

34) 250g சோயாவின் விலை ரூபாய் 28.00 எனின் 3kg 500g சோயாவின் விலை யாது?

(1) ரூபாய் 560.00 (2) ரூபாய் 460.00 (3) ரூபாய் 392.00

35) 2l 700ml குளிர்பானம் 9 மாணவரிடையே சமனாகப் பகீரப்பட்டது எனின் ஒரு மாணவன் பெற்றுக் கொண்ட குளிர்பானத்தின் அளவு யாது?

(1) 400ml (2) 200ml (3) 300ml

36) நான் மின்னஞ்சல் வாசித்தேன் என்னும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதினால்.

(1) நான் மின்னஞ்சல் வாசித்தோம்
(2) நாங்கள் மின்னஞ்சல் வாசித்தேன்
(3) நாங்கள் மின்னஞ்சல் வாசித்தோம்

37) பேருந்தொன்று முற்பகல் 10.15 இற்கு கொழும்பிலிருந்து புறப்பட்டுப் பிற்பகல் 1.00 இற்கு காலி நகரை வந்தடைந்தது, அப்பயணத்திற்குச் செலவாகிய நேரம் எவ்வளவு?

(1) 2 மணித்தியாலம் 45 நிமிடம்
(2) 2 மணித்தியாலம் 15 நிமிடம்
(3) 2 மணித்தியாலம் 55 நிமிடம்

38) 12 மணிக்கும் 12 மணி தாண்டி 30 நிமிடத்திற்கும் இடையிலான நேரம் எத்தனை நிமிடமாகும்?

(1) 30 நிமிடங்கள் (2) 25 நிமிடங்கள் (3) 20 நிமிடங்கள்

39) ஒரு கூடையில் 10 பந்துகள் உள்ளன, அதிலிருந்து ஒரு பந்து வெளியே எடுக்கப்பட்டது.தற்போது உள்ள எண்ணிக்கையை உரோம எண்குறியில் எழுதினால் வரும் விடை யாது?

(1) IX (2) XI (3) XII

40) பேருந்து ஒன்றில் 68 பயணிகள் இருந்தனர். முதலாவது தரிப்பிடத்தில் 19 பேர் ஏறிக்கொண்டனர். அடுத்த தரிப்பிடத்தில் 15 பேர் இறங்கிக் கொண்டனர்.இப்போது பேருந்தில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை யாது?

(1) 77 (2) 87 3) 72

www.ikeou.lk

வலயக்கல்விஅலுவலகம் - திருக்கோணமலை

நான்குவருடநடுத்தரக்காலஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம் - தரம்2345(4Y-MTDP-G2345)

இன் கீழ் முன்னெடுக்கப்படும்

கொவிட்-19 காலமாற்றுஉபாயக்கல்விச் செயற்றிட்டம் -III (COVID- PASEP-III)

மாதிரிப் பரீட்சை 36 – 2022

வினாத்தாள் - II

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

சுட்டெண் : .....

நேரம்: 1மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- ✱ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✱ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ✱ இவ்வினாத்தாளில் 46 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- ✱ எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ✱ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✱ ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
- ✱ செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவதுபரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியாகும்.	

[பக் 2ஐப் பார்க்க]

www.ikeduc.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

(1) கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.வாழையிலை, தாமரையிலை, வாழைத்தடல், ஓலைகள், கமுகமடல், மட்பாண்டங்கள், துணியால் செய்யப்பட்டவை, கடதாசியால் செய்யப்பட்டவை போன்றவற்றை எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்பழக வேண்டும். இவ்வாறான பொருள்களைப் பயன்படுத்திய பின் நிலத்தில் கைவிட்டாலும் அவை உக்கி நிலத்தில் பசளையாகும். உலோகத்தால், மரத்தால் ஆக்கப்பட்ட பொருள் பாவனையால் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை. பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனையை இயலுமானவரை தவிர்க்கும் போது எதிர்காலத்தில் ஏற்படும் சூழல் பிரச்சினையைக் குறைக்க வாய்ப்பு ஏற்படும்.

1) "எரு" என்பதன் ஒத்தகருத்துச் சொல் யாது? .....

2) மண் + பாண்டம் = ...

3) அன்றாட வாழ்வில் உபயோகிக்கப் பழகவேண்டிய பொருள்கள் எவை?

.....

4) இயலுமானவரை பாவனையைக் குறைக்க வேண்டிய பொருள்கள் எவை?

---

5) இப்பந்தியில் அதிக தடவை வந்துள்ள நிறுத்தக்குறி எது?

---

6) இடைவெளிக்குப் பொருத்தமான இலை மரபுப் பெயரை எழுதுக

நான் வாழை .....யில் உணவு உண்டேன். 6x1=6

(2) பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.

1) ஆற .....
2) நகமும் .....
3) வாடி .....
4) மூலை .....

4x1=4

(3) பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1) குதிரை வேகமாக ஓடியது.

---

2) குயில் இனிமையாகக் கூவியது.


---

3) பறவை வானில் பறந்தது.

3x1=3

(4) "திறமைகளை" என்னும் சொல்லிலிருந்து மூன்று சொற்கள் ஆக்குக.

ஓரெழுத்துச் சொல்
ஈரெழுத்துச் சொல்
மூன்றெழுத்துச் சொல்



1x3=3

www.lkedu.lk

(5) "நாங்கள் எங்கள் வீட்டுப் பாவனைக்கே விறகுகள் இல்லாமல் அல்லற்படுகின்றோம்" என்னும் வாக்கியம் உணர்த்தும் காலம் எது? .....

1x1=1

(6) எழுத்துப்பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.

1) நாம் வெப்ப காலங்களில் ..... அருந்துதல் நல்லது.

(இளநீர் / இழநீர் / இலநீர்)

2) மாணவர்கள் எதிர்கால வாழ்க்கைக்காக ..... காட்ட வேண்டும்.

(அக்கரை / அக்கறை / உட்சாகம்) 2x1=2

(7) பின்வரும் ஆங்கிலச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.

1) Radio …….. 2) Bank …… 2x1=2

(8) படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக

1)  ……

2) 

……

2x1=2

(9) பின்வரும் சிங்கள வாக்கியங்களின் தமிழ்க் கருத்தை தமிழில் எழுதுக.

1) ஔயாட்ட ஔனத? ----------

2) அக்கா கொஹெத? ----------

3) என்ன, அதுலட்ட என்ன? ----------

3x2=6

4) தமிழில் தரப்பட்ட சொற்களின் சிங்களக் கருத்தினை தமிழில் தருக?

1. அலுமாரி : …… 2. மணிக்கூடு : ……

2x2.5=5

- **வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டல் எழுதுக.**

1) எண்பெயரைக் குறிக்கும் எண்குறியை எழுதுக
முப்பதாயிரத்து அறுநூற்று எழுபத்திரண்டு .....

2) 2 1/2 மணித்தியாலங்கள் எத்தனை நிமிடங்களாகும்? ……

3) இன்று புதன்கிழமை நாளைய மறுநாள் 6ந் திகதி வருகிற வாரம் புதன்கிழமை எத்தனையாம் திகதி? ----------

4) ஒரு லீற்றர் கொள்ளக்கூடிய போத்தலில் 650 மில்லிலீற்றர் பால் உள்ளது. அப்போத்தல் பூரணமாக நிரப்புவதற்கு இன்னும் எவ்வளவு பால் ஊற்ற வேண்டும்?----------

5) ஒருவர் ஆறு தோடம்பழங்கள் வீதம் உள்ள ஆறு பொதிகளும் ஏழு தோடம்பழங்கள் வீதம் உள்ள மூன்று பொதிகளும் வாங்கினார் அவர் வாங்கிய தோடம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ----------

www.lkedu.lk

2kg சீனியின் விலை = 1kg கடலையின் விலை
2kg கடலையின் விலை = 1kg பால்மா பைக்கற்றின் விலை


6) 1kg கடலை 180.00 எனின் 1.2kg சீனியின் விலை யாது? .....

7) 1kg பால்மாப் பைக்கற்றின் விலை யாது? .....

8) வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

.....	2	1	8
3	3	2	18
2	4	.....	24
24	24	6	

9) உருவில் காட்டப்பட்டுள்ள உருவின் முக்கோணிகளினதும் நாற்பக்கலினதும் எண்ணிக்கை யாது?



1) ..... முக்கோணிகள்
2) ..... நாற்பக்கல்கள்

10) எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

109 , 118 , 127 , 136 , ...

11) சரியான நேரத்தைக் கடிகார முகத்தில் வரைந்து காட்டுக

ஐந்து மணிக்கு ஐந்து நிமிடங்கள்



12) தலைவர் தேர்வுக்கான வாக்கெடுப்பில் 4 அபேட்சகர் பெற்ற வாக்குகள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அபேட்சகர்	பெற்றவாக்குகள்
A	8438
B	7904
C	6156
D	4081


1. அபேட்சகர் A பெற்ற வாக்குகள், அபேட்சகர் B பெற்ற வாக்குகளைவிட எவ்வளவு கூடுதலானது? .....

2. அபேட்சகர் Cயும் , Dயும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகள் எத்தனை? .....

www.ikedu.lk

இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

13)



14) கமலன் 800 ஈர்க்குத் துண்டுகளை 10 வீதம் கட்டுக்களாகக் கட்டுகிறான். அவ்வாறு செய்யத்தக்க கட்டுக்களின் எண்ணிக்கை யாது?

.....

15) 1-20 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது?

.....

15x2=30

- **சரியான விடையின் கீழ்க் கீறிடுக**

1) எமது நாட்டிற்கே உரித்தான விலங்கு

1. யானை 2. சிங்கம் 3. சருகுமான்

2) தனது குட்டியை வயிற்றுப் பகுதியிலுள்ள உடற்பையில் காவிச் செல்லும் விலங்கு எது?

1. குரங்கு 2. யானை 3. கங்காரு

3) காற்றின் மூலம் தொழிற்படாத இசைக்கருவி எது?

1. தவில் 2. புல்லாங்குழல் 3. நாதஸ்வரம்

4) பின்வரும் எத்தாவரம் இயற்கையாகவே ஒரு சுவையான பானத்தை எமக்கு தருகின்றது.

1. தென்னை 2. தோடை 3. அப்பிள்

5) மண்ணை வளமாக்க உதவும் மண்புழுவை விவசாயிகளின் யார் என அழைப்பார்கள்

1. எதிரி 2. தோழன் 3. கோழை

6) மட்பாண்டங்கள் செய்யும் குயவர்கள் பயன்படுத்தும் உபகரணம்

1. மண்சட்டி 2. அச்சுயந்திரம் 3. வனைசில்லு

7) மரத்தின் கிளைகளிலும் தண்டுப்பகுதியிலும் காய்க்கக்கூடிய தாவரம் எது?

1. வேம்பு 2. பலா 3. மா

8) சமையல் வேலை செய்வோர் அணியும் ஆடை

1. ஏப்ரன் 2. வேட்டி 3. காக்கிஉடை

9) பின்வரும் பொருள்களுள் மின்னல் தாக்கம் உள்ள வேளைகளில் பயன்படுத்தும் போது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பொருள்

1. வாயு அடுப்பு 2. மின்சூள் 3. தொலைபேசி

10) அதிகளவில் சொத்துச் சேதத்தை ஏற்படுத்தத்தக்க இயற்கையான விபத்து

1. வெள்ளப்பெருக்கு 2. வாகனவிபத்து 3. மின்சாரத்தாக்கம்

www.ikedu.lk

11) நத்தைகளைப் பிடித்து உண்ணும் பறவையாக அமைவது
1. செண்பகம் 2. கிளி 3. குயில்

12) மிளகாய் அரைப்பதற்கு முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவி
1. அம்மி 2. ஆட்டுக்கல் 3. துருவலை

13) பச்சை நிறத்தில் காணப்படும் பூச்சி இனம்
1. சில்வண்டு 2. கும்பிடுபூச்சி 3. முசுறு

14) தொற்று நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் வழிகளில் ஒன்றாக அமைவது
1. அதிக கொழுப்பு உணவுகளை எடுத்தல்
2. கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டு கழுவுதல்
3. குடைகளில் விற்கும் உணவுப் பொருள்களை உண்ணுதல்

15) மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த மன்னன்
1. பண்டுகாபயன் 2. மகாசேனன் 3. தேவநம்பியதீசன்

16) இலங்கையிலுள்ள மூவின மக்களும் வழிபடச்செல்லும் புனித நகரம்
1. கண்டி 2. சிகிரியா 3. கதிர்காமம்

17) காய்ந்த செங்கல் துண்டொன்றினை நீர் நிரம்பிய கண்ணாடிப் பாத்திரமொன்றில இட்டபோது
1. பாத்திரத்தின் வெளியே நீர்த்துளிகள் காணப்பட்டமை
2. நீர்க்குமிளிகள் வெளிவந்தமை
3. நீர் குளிர்ச்சி அடைந்தது.

18) குழாய் நீர் விநியோகத்திற்கு கட்டணம் அறவிடுவதன் முக்கிய நோக்கமாக அமைவது
1. ஒவ்வொரு துளி நீரும் பெறுமதியானது என யாவரையும் அறியச் செய்தல்
2. நேரம் வீண் விரயமாதலைத்தவிர்த்தல்
3. வருமானமீட்டல்

19) கடதாசி மடிப்பு முறையினால் மாதிரி உருக்களை ஆக்கும் ஆக்கம் எவ்வாறு அழைக்கப்படும்
1. பரவுரூபம் 2. ஸ்ரென்சில் 3. ஓரிகாமி

20) தொடர்பாடலுகடகுப் பயன்படுத்தப்படும் அச்சு ஊடகம் அல்லாதது
1. மின்னஞ்சல் 2. செய்தித்தாள் 3. கதைநூல்கள்

21) ஆக்கிரமிப்பு நடத்தை காரணமாகத் தோன்றக்கூடியது
1. மனமகிழ்ச்சி 2. முரண்பாடு 3. நடுநிலைத்தன்மை

22) நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் பயன்
1. செல்வந்தராக வாழலாம்
2. ஆடம்பரமாக வாழலாம்
3. மேன்மையாக வாழலாம்

23) சூரியநமஸ்காரச் செயற்பாட்டின் படிமுறைகளின் எண்ணிக்கை
1. பதினொன்று 2. புதின்மூன்று 3.பன்னிரெண்டு

www.ikeou.lk

24) இந்துக்களின் சமயகொண்டாட்டங்களில் ஒன்றாக அமைவது

1. நவராத்திரி 2. வெசாக் 3. பொசன்

25) மே தினம் கொண்டாடும் மாதமாக அமைவது

1. தைமாதம் 2. மாசிமாதம் 3. மேமாதம்

26) மீன்கறிக்குப்புளியை அதிகமாக விட்டால் கறி எச்சுவையைக் கொண்டதாக இருக்கும்

1. உறைப்பு 2. புளிப்பு 3. இனிப்பு

27) உடைகளைக்கழுவுவதற்கு பயன்படும் ஒரு பொருள்

1. விம் சோப் 2. சலவைத்தூள் 3. சாம்பல்

28) மணல் மண்ணில் சிறப்பாக வளரும் தாவரம் எது

1. மரவள்ளி 2. தென்னை 3. தாமரை

29) மழை பெய்வதனால் கிடைக்கும் நன்மை அல்லாதது

1. மண்ணரிப்பு 2. குளிர்ச்சியான சூழல் 3. விலங்குகள் குடிப்பதற்கு

30) இலங்கையில் காணப்படும் அரச வங்கிகளில் ஒன்றாகக் காணப்படுவது

1. செலான் வங்கி 2. இலங்கை வங்கி 3. கொமேஷல் வங்கி

1x30=30

நாம் வெவ்வேறு வழிகளில் நீரைப்பெற்றுக்கொள்கின்றோம். நீர் ஓர் அரிய வளமாகும். அதை நாம் பேணிப்பாதுகாப்பது சிறந்ததாகும். நீரானது இன்று பல்வேறு வழிகளிலும் அசுத்தமடைந்து வருக்கிறது. "**நீர் மாசடையும் வழிகள்** எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1. ……

……

2. ……

……

3……

……

www.ikedu.lk